**பலாங்கொட பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

----------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------------

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

-------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

-----------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பலாங்கொட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---------------------------------------------------------------

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபையின் வருமானச் செலவினக் கணக்குகளிற்காக பொதுப் பேரேட்டில் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் காணி, கட்டிடமாகக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 8,700,000 பெறுமதிக்கு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள சபையின் 16 சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்பணப் பதிவேட்டின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிராத முற்பணக் கணக்குகளின் பெறுமதி ரூபா 626,491 ஆகக் காணப்பட்டது.

(ஆ) நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் ரூபா 11,390 தொகையான பெறவேண்டிய வரியை அறவிட்டுக்கொள்வதற்கு தவறியிருந்தது.

(இ) யக்கஹலு முகலான பிரதேசத்தின் காணி வாடகையான 19 காணித் துண்டுகளிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 34,250 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 156,938 கூட்டுத்தொகையான வரி 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அனுப்பிவைக்கப்படாது பல்வேறு வைப்புக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்கியிராமை |
|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 552,174 தொகையான கணனி மற்றும் உதிரிப் பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. பீஎப் - 437 | தொடர்புபட்ட சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளுக்கு முரணாக சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்று ரூபா 6,390,000 இற்கு முகவர் ஒருவரூடாக காப்புறுதி செய்யப்பட்டமைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 74,988 இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,657,594 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,943,628 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,601,222 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மீண்டெழும் வருமானம் ரூபா 9,965,394 இனால் அதிகரித்தமையும், போக்குவரத்துச் செலவினமும் வழங்கல்கள் மற்றும் உபகரண மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல்களும் பராமரிப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்

முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் ரூபா 838,721 தொகையால் குறைவடைந்தமையும் மேற்குறித்த நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்குக் காரணமாகியிருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| வருமான விடயம் | சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | ஆண்டின் மதிப்பிடப்பட் வருமானம் | 2014 மற்றும் இதற்கு முன்னைய ஆண்டிற்காக உள்ளபடியான வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 111,450 | 35,000 | 36,750 | 109,700 |
| வீதவரி | 248,566 | 509,702 | 514,880 | 243,388 |
| ஏக்கர் வரி | 38,834 | 27,638 | 19,919 | 31,115 |
| முத்திரைக் கட்டணம் | 3,360,721 | 6,000,000 | 5,982,835 | 3,343,556 |

திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை ரூபா 24,567 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம்

முன்னைய ஆண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் வரை அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 20,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

---

(அ) 2012 யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களிற்கு உரித்தான ரூபா 991,400 தொகையான முத்திரைக் கட்டணங்கள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குக் கிடைக்கப்பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்களுக்கிடையே ரூபா 942,399 தொகையான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

### 2.3.4 வீத வரி

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட முடியாத நிலுவை வீதவரி மீதி ரூபா 243,389 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 JCB இயந்திரம்

---

2014 ஆம் ஆண்டின் போது JCB இயந்திரத்தைப் பயன்படுத்தி ரூபா 2,458,680 தொகையான வருமானத்தை உழைத்திருந்த போதிலும் அவ் இயந்திரத்தைப் பராமரிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,119,937 தொகையான செலவினம் சபையால் ஏற்கப்பட்ட காரணத்தால் குறித்த இயந்திரத்தால் சபை உழைத்திருந்த தேறிய வருமானம் ரூபா 338,743 மாத்திரமாகும். இதன் படி, இவ் இயந்திரத்திற்காக உழைத்த வருமானத்தில் 86 சதவீதம் பராமரிப்புச் செலவினமாக ஏற்கப்பட்டிருந்தது.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு JCB இயந்திரம் வாடகைக்கு வழங்கப்படுவதன் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 382,079 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**3.2 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆகஸ்ட் 23 ஆம் திகதி கல்தொட்ட கமநல சேவைகள் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உழவு இயந்திரமும் உபகரணமும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபைக்குரித்தான ஒரு கொங்கிரீட் கலவை இயந்திரம் கழற்றப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(iii) சபைக்குச் சொந்தமான கழிவகற்றல் தாங்கி விளைவற்றுக் காணப்பட்டது.

(iv) 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 134 பிளாஸ்டிக் கழிவுக் கூடைகள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(v) இல. SG/JU/ 7981 மோட்டார் சைக்கிள் ஒன்றும் இல. 270/0264 உழவு இயந்திரமொன்றும் கழற்றி பரவலாக இடப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டம்**

2015 மார்ச் மாதம் களஞ்சியப்படுத்தப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் இருப்புப் பற்றாக்குறை கண்டறியப்பட்டது.

| **பொருள் விபரம்** | **பற்றாக்குறை** | **பெறுமதி** |
|---|---|---|
| | **எண்ணிக்கை** | **ரூபா** |
| கேஜ் 28 தகரம் | 10 | 17,875 |
| சிறுவர் கதிரைகள் | 25 | 9,625 |
| ஹியும் குழாய் | 13 | 92,815 |

## 3.4 செயற்திட்ட தாமதம்

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாகாண மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 19,673,740 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள 24 கைத்தொழில்களை மேற்கொள்வதற்காக ரூபா19,205,249 இற்கு பிரதேச சபை உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இற்கு முன்னர் சகல கைத்தொழில்களும் முடிவுறுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆக் கைத்தொழில்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைப் பெறுமதி ரூபா 5,558,322 தொகையானதுடன் இதற்காக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 3,981,015 ஆகும். இக் கைத்தொழில் நிர்மாணிப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(ii) வீட்டிற்கு வீடு கிராமத்திற்குக் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,600,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 08 கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுவதற்காக ரூபா 2,561,576 இற்கு 08 சங்கங்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த இக் கைத்தொழில்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 918,537 ஆகக் காணப்பட்டதுடன் நியாயமான காரணங்கள் இன்றி கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுவது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தாக 2015 மார்ச் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது காணக்கூடியதாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

சபை அங்கீகாரமின்றி 7 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,566,000 தொகையான ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

--------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்